**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 103/2024 |
| Deposition of Witness | : | PW–6 |
| Name | : | அருண் |
| Father Name | : | பரமசிவம் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 48 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காங்கேயம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.காமராஜ் அவர்கள் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.12.2023 ஆம் தேதியன்று காலை 5.00 மணிக்கு காங்கேயம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் திரு.பிரபாகரன் நிலைய அலுவலில் இருந்தபோது சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலையக் குற்ற எண். 666/2023 – U/S: 279, 304(A) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. காமராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பை திரு.காமராஜ் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 25.12.2023 ஆம் தேதியன்று காலை 6.30 மணிக்கு சம்பவ

இடத்தை ஆஜர் சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்கள். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் 25.12.2023 ஆம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன ராஜேந்திரன் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து காலை 9.30 மணியில் இருந்து காலை 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, பெருமாள், சதீஸ், ராஜா, ராஜேஷ், கண்மணி, மகேந்திரன், செந்தில்குமார், தங்கவேல், நித்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இறந்துபோன ராஜேந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக முதல் நிலைக்காவலர் மகேஷ்வரன் என்பவர் மூலமாக மதியம் 2.50 மணிக்கு திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். **(இறந்துபோன ராஜேந்திரன் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் வழக்கு கோப்புகளை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 27.12.2023 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரி தங்கராஜ் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6. இவ்வழக்கில் கடந்த 27.12.2023 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 42 AY 4484 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், கடந்த 11.01.2024 ஆம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 56 D 6532 என்ற பதிவு எண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம்

மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். கடந்த 23.01.2024 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(TN 42 AY 4484 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், TN 56 D 6532 என்ற பதிவு எண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன ராஜேந்திரன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் கிருத்திகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு நகல்கள் பெற்றுள்ளார். பின்னர் மேல் சிகிச்சை அளித்து இறப்பை உறுதி செய்து இறப்பு இண்டிமேசன் வழங்கிய திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் மோகன்ராஜ் மற்றும் இறந்துபோன ராஜேந்திரன் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். **(ராஜேந்திரன் என்பவரின் விபத்து பதிவேடு (2 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 மற்றும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் வழங்கிய இறப்பு இண்டிமேசன் அ.சா.ஆ.10, பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8. பின்னர் இவ்வழக்கில் எதிரி தங்கராஜ் என்பவரின் சம்மதத்துடன் அவரது பொறுப்பில் உள்ள TN 42 AY 4484 என்ற வாகனத்தை இளஞ்சிறார் ஜீவானந்தம் என்பவர் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் சட்டப்பிரிவினை 279, 304(A) IPC வில் இருந்து 279 304(A) மற்றும் 3 R/W 181(4) MV மற்றும் 199(A) MV ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் திரு. பிராபகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 279 304(A) மற்றும் 3 R/W 181(4) MV மற்றும் 199(A) MV ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனம் எதிரியின் பெயரில் இல்லை என்றால் சரிதான். புகாரில் நான்கு சக்கர வாகனத்தை மைனர் ஓட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் காமராஜ் விசாரித்த சாட்சிகள் யாரும் எதிரி ஜீவானந்தத்திடம் வாகனத்தை கொடுத்து ஓட்டச்சொன்னதாக தனிநபர் சாட்சிகள் யாரும் சொல்லவில்லை என்றால் சாட்சி நித்யாவின் வாக்குமூலத்தில் வாகனமானது தங்கராஜ் என்பவரின் பொறுப்பில் இருப்பதாகவும், அதை சிறுவர் ஜீவானந்தம் ஓட்டியதாகவும் கூறியுள்ளார். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எதிரியின் பொறுப்பில் இருந்ததை காட்ட நித்யாவிடம் ஆவணம் வாங்கி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளாரா என்றால் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. நித்யா தவிர மற்ற சாட்சிள் யாரும் எதிரியிடம் வாகனம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் உரிமையாளர் நித்யா என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் யாரும் நித்யாவின் உறவினர் என்று கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் நித்யா அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். நித்யாவை இந்த வழக்கின் எதிரியாக காட்டவில்லை என்றால் சரிதான். ஜீவானந்தத்திடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். குற்றம் சாட்டப்பட்டவர் இளஞ்சிறார் என்ற காரணத்தினால் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை. எதிரிக்கும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கும் அந்த வாகனத்தை ஓட்டிய ஜீவானந்தத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. ஜீவானந்தம் ஓட்டிய வாகனம் எதிரியின் பொறுப்பில் ஒதுபோதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன

நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:27:40 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்